BDJ-3-TA

# இயேசுவை வீழ்த்துவதற்கான போராட்டம் – நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பேர்க் நிகழ்ச்சியில், சிலர் ஆதிகால கிறிஸ்தவர்கள் தங்கள் கரங்களில் புதிய ஏற்பாடு இல்லாத காலத்தில் உண்மையான கிறிஸ்தவ விசுவாசம் இதுதான் என்பதை எப்படி அறிந்திருந்தார்கள்.

புத்தகங்கள் நிருபங்கள் எழுதப்பட்டபோது, எந்த புத்தகங்களை புதிய ஏற்பாட்டின் கேனனில் சேர்க்கலாம் சேர்க்க கூடாது என்பதை எப்படி அறிந்திருந்தார்கள்?

இறுதியாக, இன்றைக்கு, ஒருவேளை அப்போஸ்தலர்களின் நிருபங்கள் புத்தகங்கள் ஆகியவற்றின் ஆதிகால எழுத்துகள் நம்மிடம் இல்லாதிருந்தால், இதுதான் ஆதிநாட்களில் எழுதப்பட்டது என்பது நாம் அறிந்துகொள்வது எப்படி? இன்றைக்கு அதை அறிந்திட போகிறோம், இந்த ஜான் அன்கெர்பேர்க் நிகழ்ச்சியில் காண இருக்கிறோம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் சரித்திரத்தில் இயேசு என்பதை பற்றியும் அதற்கு மாறாக இருக்கும் கண்ணோட்டங்களை பற்றியும் பார்த்து வருகிறோம் இதற்கு காரணம் ஊடகங்கள் – நாவல்கள், புத்தகங்கள், டிவி நிகழ்சிகள் – பாரம்பரிய இயேசு எப்படியிருந்தார், கிறிஸ்தவத்தின் இயேசு எப்படிபட்டவர், அதை நன்றாக ஆராய்ந்து சரிபடுத்த வேண்டும். இன்றைக்கு உலகின் முன்னனி மேதைகளாக திகழும் இருவர் நம்மத்தியில் இருக்கின்றனர். Dr. டேரல் பாக், புதிய ஏற்பாடு ஆராய்ச்சி பேராசிரியர் டல்லாஸ் தியோலஜிக்கள் செமினரி, மற்றும் Dr. டேனியேல் B. வேல்லேஸ், [புதிய ஏற்பாடு ஆய்வு பேராசிரியர் டல்லாஸ்.

இப்ப இயேசு செமினாரில மார்க்ஸ் பார்க் கிறிஸ்தவத்தை பற்றி சொன்ன காரியங்கள் உங்களுடைய காதுகளுக்கும் எட்டியிருக்கும் என்று நான் நினைக்கிறேன் அதை பற்றி தெரியுமா. இதுல கேள்வி என்னன்னா, இந்த காரியத்தை எப்படி கையாளுவீர்கள்? மார்க்ஸ் பார்க், அவருடன் இருப்பவர் பெயர் ராபர்ட். W. பங், அவரும் ஜீசஸ் செமினாரில இருக்காரு. பங் தனது புத்தகத்தில் சொல்லியிருக்கிறார், “ சுவிசேஷங்கள் அனைத்தும் இப்போது இயேசுவை பற்றிய நினைவுகளையும் சபையானது அவரில் கொண்டிருக்கும் விசுவாசத்தையும்

வெளிப்படுத்தும் ஒரு கதையாக கருதப்பட்டு வருகிறது.” இப்ப, இவங்க என்ன சொல்ல வர்றாங்க, டேரல்?

சரி, அவங்க என்ன சொல்றாங்கன்னா இயேசு தம்மை குறித்து சொன்னதாக சொல்லப்படுகிற எல்லாம் மிகவும் உயர்வானதாகவும் நம்பமுடியாததாகவும் இருக்கிறது இதெல்லாம் இயேசு தம்மை பற்றி சொன்னவைகள் அல்ல சீடர்கள் சொன்ன விஷயங்கள் என்கிறார்கள். மேலும், உண்மையில், தேவன் இருக்கிறார் அவர் விஷேஷமானவைகளை செய்கிறார் என்று நம்பாவிட்டால், நமக்கு புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்களினால் அதை நம்பும்படி கட்டாயப்படுத்தப்படுகிறவர்களாக இருந்திடுவோம். சீஷர்களுக்கு இயேசுவை பற்றிய இந்த கண்ணோட்டம் எப்படி வந்தது என்பதை நம்மால் விளக்கமாக சொல்ல முடியனும். இயேசு தம்மை பற்றி இப்படி ஒரு கண்ணோட்டத்தை கொண்டிராவிட்டால், அவர்களை எந்த விஷயம் உந்தி தள்ளியிருக்கும்? பல சமயங்களில் இந்த கேள்வி கேட்கப்படுவதில்லை என்று நினைக்கிறேன். இதை யோசிப்பது அவசியமாயிருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், கடந்த சில வாரங்களாக நாம என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்று பார்த்தீர்களானால் நாம எப்படி விமர்சனங்களை எதிர்கொள்வது என்பதை பார்த்துகொண்டு இருக்கிறோம். இயேசுதுவத்தை பற்றி பேசுகிறவர்களிடம் இருந்து வருகிற சவால்களை எப்படி எதிர்கொள்வது என்பதை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம், இதில் இயேசு விசேஷமான நபர் என்கின்றனர், அவர் ஒரு தேவன் கிடையாது, யாருடைய பாவத்தையும் மன்னிப்பதில்லை, அற்புதங்கள் செய்வதில்லை. மாறாக கிறிஸ்தவத்தில், அவரை தேவன் என்று அழைக்கிறோம் நம்முடைய பாவங்களுக்கான விலையை செலுத்தியிருக்கிறார், நமக்கு நித்திய ஜீவனை அளிக்கிறார் என்கிறோம். சரி, அவர் நம்மை மறுரூபப்படுத்தி சுத்திகரிக்கிறார். இப்படி பல கருத்துகளை நாம் கேட்க்க நேரிடும், இயேசுவை பற்றிய புதிய கருத்துகள், நாம சொல்றது எல்லாமே நடந்த சம்பவங்கள், வரலாற்று வேர்கள் எல்லாம் கிறிஸ்தவத்தை தழுவியிருக்கிறது இயேசுதுவத்தை அல்ல.

ஆனா அதை நிருபிகும்விதமாக, இந்த அவுட்லைனை நாம பூர்த்தி செய்ய விரும்புகிறோம். சில வாரங்களுக்கு முன்பாக இதை துவங்கினோம், உண்மையாகவே, இயேசு வாழ்ந்திருக்கிறார், பன்னிரண்டு சீஷர்களை தெரிந்துகொண்டார், எல்லாரும் இதை ஏற்றுகொள்கிறார்கள். உண்மை இதுதான், இயேசு மரித்தார், அவர் மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்று நாம் நம்புகிறோம், ஆனா உண்மையில், அவர் மரித்தார் என்பதை பலரும் ஒப்புகொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள். அவர் கல்லறையில் வைக்கப்பட்டதில் இருந்து ஐம்பதாவது நாள் நடக்கிற விஷயம் பெந்தெகோஸ்தே நாள், யூதர்களின் பண்டிகை, அன்றைக்கு 12 அப்போஸ்தலர்களும் எழுந்து நின்று அவருடைய மரணத்திற்கு சாட்சியாக

இருந்தவர்களுக்கு முன்பாக நின்று அவர்களுக்கு பிரசங்கித்தனர் அதில் மூவாயிரம் யூதர்கள் மனம்மாரினார்கள். அந்த மனம் மாரினவர்களின் கூட்டத்தில் இருந்து, ஜனங்கள் ரோம சாம்ராஜ்யம் முழுவதும் சென்று, பதினைந்து விதமான மக்கள் இனத்தின் மத்தியில் சபையை நிறுவினார்கள், சரியா? அவர்களின் அடித்தளம் என்னவாக இருந்தது? பெந்தெகோஸ்தே நாளன்று அவர்கள் கேட்ட அப்போஸ்தலர்கள் பிரசங்கமாக இருந்தது.

சரி, இதற்கிடையில் அதாவது பெந்தெகோஸ்தே நாளுக்கும் சபைகளை நிறுவினபிறகு ஜீவநோடிருக்கும் அப்போஸ்தலர்கள் எங்கும் சுற்றி திரிந்தனர். “பேதுரு, இப்ப அவரை பற்றி பார்க்கலாமா. அவருக்காக ஒரு கேள்வி இருக்கிறது.” ஆர்தடக்ஸ் என்றால் என்ன என்று உங்களுக்கு தெரியும், எது ஆர்தடக்ஸ் இல்லை, ஏன்னா அவங்க இயேசுவோட இருந்திருக்காங்கள்ள.

அவர்களுக்கு மையமான ஒரு கருத்து இருக்கிறது, பரிசுத்த அறிக்கைகள் மூலம் அளிக்கப்பட பாரம்பரிய போதனைகள். பாடல்கள் இருக்கிறது, கீர்த்தனைகள், இவை இறையியலால் நிறைந்திருக்கிறது. அதற்கு பிறகு பரிசுத்த சடங்குகளான ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி இருக்கிறது. அதற்கு பிறகு அப்போஸ்தலர்களின் நிருபங்கள் வெளியே வர துவங்கியது. அவை வெளிவந்த காலம் என்று பார்க்கும் போது, ஆதிநாட்கள் தான்; நாற்பதுகளில் வந்தது. இயேசு முப்பதுகளில் மரித்தார் என்றால், உண்மையில், அது பத்து முதல் பதினைந்து ஆண்டுகளுக்குள் எழுதப்படிருக்கிறது. இது ரொம்ப குறுகிற கால இடைவெளியை கொண்டிருக்கிறது. அதற்கு பிறகு அவர்கள் அறுபது எழுபதுகளில் மரிக்க துவங்கங்கினர். யோவான் மட்டும் 100 ஆண்டுகளை தொட்டிருப்பார் என நினைக்கிறேன், ஆனா 100 வருடங்களுக்குள் எல்லாரும் இறந்துவிட்டார்கள்.

அவர்கள் நமக்கு கொடுத்திருக்கும் தகவல்களைத்தான் நாம் மையமாக வைத்து பார்த்துகொண்டு வருகிறோம். இதைதான் அவர்கள் பறைசாற்றினார்கள், வால்மொளியாக பேசும்போது அவர்கள், தேவனுடைய வார்த்தையைத்தான் அவர்களோடு உரையாடிகொண்டிருந்தனர். பிறகு அவர்கள் தங்கள் புத்தகங்களை எழுதியபோது, நிருபங்கள் மூலம், தங்களுடைய விசுவாசத்தை பற்றி பகிர்ந்திட துவங்கினார்கள், அவை வசனங்களாக இருந்தனர். அதை விசுவாசித்தார்கள், இப்போது அதை பற்றி நான் விவாதிக்க விரும்பவில்லை, என்ன சொல்ல வருகிறேன் என்றால் அந்த காலகட்டத்தில் கிறிஸ்தவர்கள் இதை விசேஷமான ஒன்றாக கருதினார்கள், அதை சேகரித்து வைக்க விரும்பினார்கள். இந்த விசேஷமான காரியங்கள் அனைத்தும் கிபி 100 வருவதற்குள் செய்து முடிக்கப்பட்டிருந்தது.

சரி, இதை நீங்கள் கண்டறிவதற்கு ஏற்ற வழி என்னவென்றால் அப்போஸ்தலர்களின் மாணவர்கள், சரியா? அத வரிசையில் பார்க்கும்போது,

இப்ப, ரோமாபுரியின் கிளமென்ட், இவர் கிபி 95 ல் இருந்தவர். அதற்கு பிறகு யோவானின் சீடனாகிய பாளி கார்ப் இருந்தார். அடுத்தபடியாக இக்னேஷியஸ், அடுத்ததாக இருப்பவர் பாபியாஸ், இவர்கள் எல்லாருக்கும் பிறகு கடைசியாக இருப்பவர் இரேனியஸ். இந்த பட்டியலை அப்படியே பார்த்து கொண்டிருந்தால் அந்த மாணவர்களுடைய மாணவர்களின் பட்டியல் கிடைக்கும். ஆனா ஒரு காரியத்தில் கவனம் செலுத்த விரும்புகிறேன் இதுலதா உங்க உதவியும் தேவைபடுகிறது, டேரல், உண்மையில், சில மாணவர்கள் அப்போஸ்தர்களின் எழுத்துக்களை பற்றி என்ன சொல்கிறார்கள் இதை யார் எழுதியது எப்படி நமக்கு வந்து சேர்ந்தது?

Dr. டேரல் பாக்: இப்ப, ஆரம்ப நாட்களில், உண்மையில், முதல் முதலாக எழுதப்பட்டவை என்று பார்க்கும்போது அப்போஸ்தலர்கள் காலத்திற்கு முன்பாகவே இருக்கிற, சில தனித்துவம் வாய்ந்த காலத்தை பார்க்க முடியும், அதாவது அந்த கட்டத்தில் சபைக்குள்ளும் அதை சுற்றிலும் தனித்துவமிக்க விஷயங்கள் நடந்துகொண்டிருந்தது. இப்ப, உதாரணமாக, ரோமை சேர்ந்த கிளமென்ட் தமது முதல் கிளமென்டின் நிருபத்தின் நாற்பத்தி இரண்டாம் அதிகாரத்தில் எழுதும்போது, “அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து சுவிசேஷத்தை பத்றனர். இயேசு கிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டவர். ஆகவே கிறிஸ்து தேவநிடமிருந்தும் அப்போஸ்தலர்கள் கிறிஸ்து மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இருவருமே தேவனுடைய சித்தத்தை செய்யும்படி ஏற்ற காலங்களில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதிகாரத்தையும் கட்டளையையும் பெற்றவர்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற நிச்சயத்தோடு தேவனுடைய வார்த்தையின் உறுதியோடும் பரிசுத்த ஆவியின் முழு நிச்சயத்தோடும், சந்தோஷமாக தேவனுடைய ராஜ்யத்திற்கு உரியவைகளை சொல்லி வருகிறார்கள். ஆகவே, எல்லா பட்டணங்களிலும் நகரங்களிலும் பிரசங்கித்து, அவர்கள் சொன்னவைகளை நம்புகிரவர்கலான சிலரை தெரிந்துகொண்டு அவர்களை தங்களுடைய முதற்பலனாக நிறுத்தி பேராயர்களகவும் மூப்பர்கலாகவும் ஏற்ப்படுத்தினார்கள்.

அதனால கிறிஸ்துவும் இருக்கிறார்; இப்போது கிறிஸ்துவின் செய்தியை வெளிபடுத்தும் அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். அவர்கள் சபைகளை ஸ்தாபித்து அதற்கு நல்ல மூப்பனையும் தலைவரையும் ஏற்ப்படுத்தி வைத்து செல்வதை பார்க்கிறோம். இதைதான் இந்த அறிக்கை கூறுகிறது. ஆனா அப்போஸ்தலர்களுக்குள் ஏதோவொரு விசேஷமான காரியம் நடக்கிறது என்பதை கண்டறிந்தனர், நமக்கு நிறை அப்போஸ்தலர்கள் இல்லைன்னு உங்களுக்கே தெரியும். அப்படிதானே. அப்போஸ்தலர்கள் மரித்த பிறகு நிறைய அப்போஸ்தலர்கள் எழும்பவில்லை, இந்த

மாதிரி சொன்னா புரியுன்னு நினைக்கிறேன். இயேசு கிறிஸ்துவினுடைய நேரிடியான இடைபடுதலை கொண்ட தனித்துவமிக்க குழுவாக இருந்தனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதுல சுவாரயமான என்னன்னா, டேன், இங்க கிளமென்ட் பேதுருவினால் நியமிக்கப்படுகிறவராக இருக்கிறார். அவர் ரோமாபுரியில் பேராயராக இருக்கும்படி பேதுருவால் நியமிக்கப்பட்டவர் தான?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அப்படின்னா இங்க இன்னொரு ஜீவனோடிருக்கும் அப்போச்தலரின் மாணவர் இதே காரியத்தை தொடர்ந்து கூருகிரவராக இருக்கிறார் என்பது உறுதியாகிறது, அதாவது, வரலாற்று ரீதியாக பார்க்கும்போது இது ஒரு திடமான ஆதாரமாக இருக்கிறது.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** நிச்சயமா. உண்மையில், எசுபியஸ் தான் முதலில் கேணனை பற்றி சிந்தித்த துவங்கினார் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கிறது, அவர் என்ன செய்தார் என்றால் அவரிடம் இருந்த எல்லா வருடாந்திர பதிவு ஆவணங்களை ஆராய்ந்திட துவங்கினார். ஹோமொலோகௌமீனா என்று அழைக்கப்படுவதை ட்ரேஸ் பண்ணினார், புத்தகங்கள், மையமான புத்தகங்கள் – இதை பற்றி இன்னொரு நிகழ்ச்சியில் பார்ப்போம் என நினைக்கிறேன் – இந்த கருபொருளான புத்தகத்தை இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எல்லாரும் ஏற்றுகொள்ள துவங்கினார்கள். இருபது புத்தகங்கள் ஏற்றுகொள்ளப்பட்டது என்கின்றனார், இவை அனைத்தும் அப்போஸ்தலர்களின் நாட்களுக்கு கொண்டு செல்கிறதை அறிந்திருக்கிறோம். எசுபியஸ் இதை கண்டறிய மத்திய கடலை சுற்றியுள்ள சபைகளுக்கு சென்று அங்கிருந்த ஒவ்வொரு பேராயர்களை மூப்பர்களை சந்தித்து அப்போஸ்தலர் காலத்தை பற்றி தெரிந்தவர்களை கண்டறிந்தார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இன்னொரு காரியத்தையும் எனக்கு சொல்லுங்க, பாலிகார்ப் சொன்னவை. இவர் அப்போஸ்தலனாகிய யோவானின் சீடன் தானே, சரியா?

**Dr. டேரல் பாக்:** இவர் அப்போஸ்தலனாகிய யோவானின் மாணவர். இவருடைய பெயர், அதாவது, இவர்தான் இரேனியஸ், இவர் பாலிகார்பின் மாணவர், இவர் சொன்ன காரியம்தான் இவை.இவை அகைன்ச்ட் ஹெரேசி யில் எழுதப்பட்டிருக்கிறது, 311. இது சுவிசேஷத்திற்கு ஒரு அவுட்லைனை தருகிறது, சுவிசேஷங்களில் எங்கிருந்து பெறப்பட்டன என்பதன் பாரம்பரியத்தை பற்றி கூறுகிறது. “மத்தேயு தமது சுவிசேஷத்தை எபிரேயர்கள் மத்தியில் (யூதர்கள்) அவர்கள் சொந்த பாஷையில் எழுதினார்கள் பேதுருவும் பவுலும் ரோமில் சுவிசேஷத்தை பிரசங்கித்து அங்கே சபையையும் நிறுவினார்கள். அவர்களுடைய மறைவிற்கு பிறகு ( அதாவது அறுபதுகளில் நீரோவின் உபத்திரவத்தால்

மரித்தார்கள் எனப்படுகிறது, சரியா, அவர்கள் மறைவிற்கு பிறகு, அதாவது, மரணத்திற்கு பிறகு), மாற்கு, பேதுருவின் சீஷனும் மொழிபெயர்பாலருமானவன் பேதுரு பிரசங்கித்த அனைத்தையும் எழுத்து வடிவில் கிடைக்கப்பேரும்படி செய்தார், லூக்கா, பவுலின் சீடன், அவருடைய போதகரால் பிரசங்கிக்கப்பட்ட செய்தியை நற்செய்தி நூலாக எழுதினார். அடுத்து யோவான், கர்த்தருடைய சீஷனானவர், அவருடைய மார்பில் சாய்ந்துகொண்டிருந்த இவர், ஆசியாவின் எபேசுவில் இருந்தபோது அவர் தமது கைப்பட சுவிசேஷத்தை எழுதினார்.

இப்படிதான் நமக்கு நான்கு சுவிசேஷங்கள் கிடைத்திருக்கிறது. சிறந்த இரண்டு அப்போஸ்தல சுவிசேஷகர்கள் நமக்கு இருக்கிறார்கள், அதாவது, மத்தேயு மற்றும் யோவான். அடுத்து இருப்பது மாற்கு, பேதுருவோடு நெருங்கியவராக கருதப்படுகிறவர். அடுத்ததாக லூக்கா, இவர் பவுலோடு நெருக்கமாக இருந்தவர். அதுமட்டுமல்ல, சிலசமயங்களில் இது சவாலாக இருக்கும். சிலர் இப்படியாக சொல்வதுண்டு, சரி, லூக்கா பவுலினால் எழுதப்பட்ட நூல அல்ல. யாரோவொரு நபரை எடுத்து அவரை பவுலுடன் சேர்த்து பேசுகிறீர்கள் என்பார்கள். ஆனா இந்த ஆலோசனையில் இருக்கும் பிரச்சனையை கவனிக்க வேண்டும். அதாவது, பவுலுடன் இருந்த எல்லாரையும் பற்றி கொஞ்சம் சிந்தித்து பாருங்கள் அதில் இதை எழுதியவர்களும் தொடர்புடையவர்களாக இருக்கலாம் அல்லவா லூக்கா/ அப்போஸ்தலர், சரியா? அங்க தீமோத்தேயு இருந்தார், அபாரம் டித்து, பர்னபாசும் இருந்தார், சீலாவும் இருந்தார். அது ஆற்றல் மிகுந்தவர்களின் பட்டியல் போயிட்டே இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுலோடு இருந்த ஒருவர் இந்த புத்தகத்தை எழுதவேண்டும் என நினைக்கிறேன் அதினால் அப்போஸ்தல தாக்கம் உண்டாயிருக்குமே. நிறையபேர் இருக்காங்க, ஒரு சின்ன பிரச்சனை. சபையின் பாரம்பரியத்தை பற்றி பார்க்கும்போது, சபை பாரம்பரியத்திற்கு ஏற்றார் போல இருக்க கூடிய ஒருவர் லூக்கா தான். லூக்காவை குறித்த சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால் இவர் பவுலோடு அதிக நெருக்கமுடியவர்களின் பட்டியலில் பெரும்பாலும் காணப்படுவதில்லை. அவர் நா குறிப்பிட்ட பெயர்களோடு ஒப்பிட்டு பார்க்கும்போது பவுலோடு அதிக நெருக்கம் இல்லாதவர் போல தோன்றும். அந்த மாதிரியான கண்ணோட்டாத்தில் பார்ப்போம் என்றால் – சில வரைமுறைகளை போடவேண்டியிருக்கும் – அதிலிருந்து தேர்ந்தெடுக்க நேர்ந்தால், நிச்சயமாக லூக்காவின் பெயரை யாரும் பரிந்துரைக்க மாட்டார்கள். இப்ப பிரட்சனை என்னவென்றால், லூக்கா அந்த பாரம்பரியத்தை சேராதவனாக இருந்தால் எப்படி பவுலினுடைய எல்லா பழக்கங்களையும் துல்லியாக அறிந்திருக்க முடியும்? இதைதான் கவனிக்கணும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்படிப்பட்ட மாணவர்களை கொண்டிருப்பதில் உள்ள விசேஷம் என்ன, “இதைதான் அப்போஸ்தலர்கள் சொன்னார்கள், அல்லது “எங்களுக்கு தெரிந்தது இதுதான், இந்த காரியங்களை தான் சொல்லுகிறார்களா?

Dr. டேரல் பாக்: இங்க கவனிக்கவேண்டிய ஒன்று சபையும் இணைந்தே வருகிறது, அப்போஸ்தலர்கள் மற்றும் அப்போஸ்தலர்களை பின்பற்றுகிறவர்களுக்குள் இந்த காரியங்களை நாட்டுகிறார்கள்,. மறுபடியுமாக, சட்டதிட்டங்களை உண்டாக்குகிறோம் என்று வைத்துகொள்வோம், நீங்க சில சட்டதிட்டங்களை உருவாக்குகிறீர்கள். இயேசுதுவத்தை சேர்ந்தவர்கள் எடுத்துக்குவாங்க, சபையானது வரவர சில வரைமுறைகளை வகுத்திட துவங்குகிறது, இப்ப இறையியல் எங்கையோ பறந்துபோய்விட்டது, சரியா? அதனால அவங்க இப்ப என்ன சொல்றாங்கன்னு கேடீங்கன்னா, “சரி, அப்போஸ்தலர்கள் அல்லது அப்போஸ்தலரை சார்ந்தவர்கள் நான்கு சுவிசேஷங்களை எழுதினார்கள் என்று சொல்லபடுவதை விரும்பவில்லை. நான்கு சுவிசேஷங்கள் இருக்கும், அதை அப்போஸ்தலர்கள் தான் எழுதியதாக சொல்வோம் என்கின்றனர்.” அதனால நீங்க ஒருசில வரைமுறை சட்டதிட்டங்களை வைக்கும்போது தற்காப்பாக இருந்திட முயன்றிடுவீர்கள், அதாவது, தீண்டத்தகாதது போல, சுவிசேஷங்களை எழுதிய நான்கு அப்போஸ்தலர்களை நீங்களே தெரிந்தெடுத்திடுவீர்கள், 2 அப்போஸ்தலர்கள் 2 பேர் அப்போஸ்தலர்களோடு இருந்தவராக இருக்கட்டும் என்பதை ஒப்புகொள்ள மாட்டோம்.

Dr. டேனியேல் B. வால்லேஸ்: அவர்களோடு கூட இருந்தவர்கள் என்பது கண்ணார பார்க்காத அப்போச்தலரோடு இருக்கிற ஒருவர்கள். இன்னொரு விதமாக சொன்னால், பவுல் பிற்பாடு வந்தவர்.

Dr. டேரல் பாக்: சரியாக சொன்னீங்க.

Dr. டேனியேல் B. வால்லேஸ்: இந்த காரியத்தில் லூக்கா இரண்டா அடிகளை விளக்கி விட்டார், அதோடு ஏற்கனவே பார்த்தது போல அவர் இவரோடு சேர்ந்து இருந்தவராக இருக்கிறார்.

Dr. டேரல் பாக்: இன்னொரு விஷயமும் யதார்த்தமாக இல்லை என்பதை கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. சிலர் மாற்கு பவுலின் சுவிசேஷ சாயலை பிரதிபளிப்பதாக விவாதிக்கின்றனர், அதனால இப்படிப்பட்ட காரியங்களை சொல்லி சீஷர்களை ஒருவருக்கு எதிராக ஒருவராக நிறுத்துகின்றனர். மத்தேயு பேதுரு மற்றும் யோவான் இவர்கள் கிறிஸ்தவத்தின் ஒரு பக்கம் இருப்பவர்கள் – இவர்கள் எல்லாரும் யூதர்கள். பவுல் மற்றும் மாற்கு கிறிஸ்தவத்தின் மறுபக்கத்தை சேர்ந்தவர்கள் – இவர்கள் புறஜாதிகள் மீது அதிக கவனம் செலுத்துபவர்கள். இந்த விதமாக மாற்கு பவுலோடு இணைத்து பார்க்கப்படுகிறார். இருந்தாலும் பாரம்பரியம் அவரை பவுலோடு இணைத்து கூற முற்படுவதில்லை, பாரம்பரியங்கள் மாற்குவை பேதுருவோடு இணைத்து காட்டுகிறது, சரியா? எப்படியிருந்தாலும் மாற்கு ஜனநாயகம் குடியரசு இரண்டு பார்டிகளிலும் பங்கு வகிப்பவராக இருந்து வருகிறார். அதனால இயேசுதுவம் இந்த உறவுகளில்

இருக்கும் பிணைப்புகளை பற்றி சொல்லுகிற விஷயங்களில் சில மாற்றுகருத்துகள் கானபப்டுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, அதோட இது அவயவங்களுக்குள் நடக்கும் சண்டை. உண்மையில், 1 கொரிந்தியர் 15ல், பவுல் கூறுகிறார், நாங்கலானாலும் அவர்கலானும் சரி, எல்லாரும், நாங்கள் அனைவரும் ஒரு காரியத்தை பற்றிதான் பேசுகிறவர்களாக இருக்கிறோம் என்கிறார். (1 கொரி.15:11)

**Dr. டேரல் பாக்:** நிச்சயமான உண்மைதான். அதாவது இந்த காரியம் கிறிஸ்தவத்தில் எந்தவிதமான மாற்றுகருத்துகள் இருந்தாலும் குறிக்கோள் ஒன்று தான் என்பது இயேசுத்துவத்திற்காக விவாதிப்பவர்களுக்கு முன்வைக்கப்படுகிறது. அப்படி செய்துதான் ஆகவேண்டும். அவங்க வேதாகமத்தை தாக்க வேண்டும். அதாவது வரலாற்று சான்றாக இருக்கும் வேதத்தை தாக்க முடிந்தால், கிறிஸ்தவத்தை பற்றியும் அந்த காலத்தை பற்றியும் அவர்கள் சொல்லுகிற எல்லாவற்றையும் எதிர்த்திட அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திடும். ஆனா வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது எல்லாம் இசைவாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால், உங்களால ஒன்றுமே செய்ய முடியாது. ஐரோப்பா அல்லது ரோமிற்கு போகும்போதெல்லாம் ஒரு விஷயம் நினைவில் இருக்கும், ஏதாவது ஒரு விதத்தில் பவுலும் பேதுருவும் ஒருவரோடு ஒருவர் நெருங்கி இருப்பது போன்ற படங்கள் எத்தனை இருக்கும் தெரியுமா. அதாவேது, செயின்ட் பால் சபைக்குள் நீங்க நுழைந்தால் அங்க பேதுருவும் பவுலும் ஒன்றாக இருக்கிற படங்கள் வரைந்து வைக்கப்பட்டிருக்கும். பேதுருவும் பவுலும் ஒருவருக்கொருவர் அருகில் இருப்பது போன்ற மொசேக் இருக்கும். செயின்ட் பீட்டர்ஸ் சதுரத்திற்கு சென்றால், அங்க பேதுருவினுடைய சிலையும் பவுலினுடைய சிலையையும் பார்க்க முடியும். இவர்கள் இருவருக்கும் இடையில் உள்ள உறவை பற்றி சபையானது ஏதையோ சொல்ல முனைகிறதென்று நினைக்கிறேன், அந்த விஷயம்கிறிஸ்தவத்தின் ஆதிகாலம் முதல் நம்பப்படுகிற ஒன்றாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. நானும் அப்படிதான் நினைக்கிறேன், அதாவது, உண்மைய சொன்னா, நூற்றுகணக்கான அப்போஸ்தல சாட்சிகள் எழுதப்பட்டிருக்கிறது, சரியா? அப்போஸ்தலர்களின் மாணவர்கள் அதை அங்கீகரித்து அதை முன்மொழிந்தும் இருக்கிறார்கள், மேலும் அவர்களுடைய போதனைகளுக்கும் அப்போஸ்தலர்களுடைய எழுத்துக்களுக்கும் மிகப்பெரிய வித்தியாசங்கள் உண்டாயிருக்கிறது. இப்ப, சபையானது இதை புரிந்துகொள்ள சில காலங்கள் ஆனது உண்மையாக தேவன் அவர்களுக்கு என்ன கொடுத்தார், அவர்கள் நமக்கு எதை விட்டு சென்றிருக்கிறார்கள். ஆனா கடைசியாக அதை கண்டறிந்தனர், அதுவும் அதே பழைய நிலையில் தான் வந்து நின்றது: இது அப்போஸ்தலர்களுடையதா, அல்லது அப்போஸ்தலர்களோடு இருந்தவர்கள்

எழுதியதா? இது பெரிய விஷயம் இல்லையா, ஆல்ரைட்? இப்ப, நாம திரும்ப வந்ததும் இதை பார்க்க இருக்கிறோம், ஓகே, இந்த விடுபட்ட சுவிசேஷங்கள் எப்போது எழுதப்பட்டன, சரியா? அடுத்ததாக இயேசு கூறிய அப்போஸ்தல சாட்சிகளை பார்க்கும்போது உங்களை வியப்படைய செய்கிற காரியங்கள் என்னவாக இருக்கிறது என்று நினைக்கிறீர்கள், அவர் சொன்னதை அவர்கள் கேட்டார்கள், சரியா? அதாவது தேவனுடைய குமாரன், மேசியா என்று சொன்ன அறிக்கைகள். இதெல்லாம் வியப்பை உண்டாக்கும் அறிக்கைகள். இவைகள் உங்களுக்கு உண்டாக்கின அதிர்ச்சி, தங்கள் வேதாகமத்தை திறந்து பார்க்க விரும்புகிற யாராக இருந்தாலும், அவர்களுக்கு உங்களால் சொல்ல முடியும், இல்லையா? நாம திரும்ப வந்ததும் இதை பற்றிதான் பேசிட இருக்கிறோம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் இப்போது Dr. டேரல் பாகுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம், இவர் சரித்திர இயேசுவை பற்றி அறிந்த மேதையும் தலைவருமாக இருக்கிறார். மேலும் Dr டேனியேல் B. வால்லேஸ், இருக்கிறார் இவர் இன்றைய உலகின் சிறந்த விமர்சகராக இருக்கிறார், புதிய ஏற்பாட்டின் கிரேக்க பதங்களின் முழு உரிமம் பெற்றிருக்கும் நபராக இருக்கிறார். நீங்க இங்க இருப்பதை என்னால் வர்ணித்து சொல்லவே முடியாது. உங்களோடு உரையாடுவது எனக்கு கிடைத்த சிலாக்கியம். நாம விட்ட இடத்திலிருந்து தொடங்கலாம் என நினைக்கிறேன். உண்மை இதுதான், இயேசு இருக்கிறார், அப்போஸ்தலர்கள், பெந்தெகோஸ்தே நாள் இருக்குது, இப்ப சபை நிறுவப்பட்டு வருகிறது, அடுத்து நிருபங்களும் புத்தகங்களும் வெளிவர துவங்குகிறது, அடுத்து இதை அதிகாரப்பூர்வமானது என பிரகடனிக்கிறோம் என்று சொல்லுகிற அப்போஸ்தலர்களின் மாணவ கூட்டம் இருக்கிறார்கள். இப்ப இந்த விஷயத்தை தான் தெரிந்துகொள்ளவேண்டும், இந்த விடுபட்ட சுவிசேஷங்கள் எப்போது வெளியானது, அங்கிருந்த பின்வாங்கின கிறிஸ்தவர்களுக்கு எது மிகப்பெரிய கேள்வியாக இருந்துவந்தது?

**Dr. டேரல் பாக்:** சரி, இவை அனைத்தும் முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் துவங்கினது, இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களிலும் இருந்தது. விடுபட்ட நிலையை அதற்கு உண்டானதற்கு காரணம் சிருஷ்டிப்பை பற்றி பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட காரியங்களுக்கு மாற்றாக அவை அமைந்திருந்தது, யூதர்களிடமிருந்து கிறிஸ்தவம் சுதந்தரித்த காரியங்களுக்கு மாறானவை சொல்லப்பட்டிருந்தது. அந்த கதையானது இந்த உலகம் இரட்டை பண்பு கொண்டது என்பதன் அடிப்படையில் இருந்தது. தீமை என்கிற ஒன்று இருக்கிறது; ஆவி உலகம் என்று ஒன்றுண்டு அது நல்லது. தேவனால் தீமையானவற்றோடு ஒத்து போக முடியாது என்பதினால், தேவன் நேரடியாக சிருஷ்டிப்பில் பங்காற்றவில்லை. ஆதலால் மெய்யான தேவன் தமது சாயலான மற்றொன்டை

பயன்படுத்தி இந்த சிருஷ்டிப்பின் வேலையை முடித்தார். அதனால்தா இந்த சிருச்டிப்பானது துவக்கத்தில் விழுந்துபோன சிருஷ்டிப்பாக இருக்கிறது. இது யூதர்களிடமிருந்த ஆதியாகமம் 1 றிற்கு மாற்றாக இருந்தது. ஆனால் பழைய ஏற்பாட்டின் மற்ற சில பகுதிகளில் பார்க்கும் போது, தேவன் சிருஷ்டித்த போது அது நல்லது என்று கண்டதாக இருக்கிறது. ஆரம்பத்தில் அது நல்லதாகத்தான் இருந்தது, வீழ்ச்சி என்பது சிருஷ்டிப்பின் செயல்முறைகளின் விளைவாக நடந்த ஒன்றாக இருக்கிறது. அதனால், நேரடியாக இதைதான் இந்த பிரச்சனையை தான் முதலில் நிறுத்துகிறார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இந்த காரியத்தினுடைய மைய கருபோருளின் சாராம்சத்தை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் அதினால் மற்ற காரியங்களை சார்ந்திருக்கும் கிறிஸ்தவர்கள் அதை நிராகரித்திட உதவியாக இருக்கும்.

**Dr. டேரல் பாக்:** எது ரொம்ப ரொம்ப முக்கயமான விஷயம் என்றால் கிறிஸ்தவர்கள் பிடித்து கொண்டிருக்கிற காரியம் என்னவென்று பார்த்தால் யூத மார்கத்தில் இருந்து கிறிஸ்தவம் பிறந்ததற்கு அடையாளமாக இருக்கிற ஆர்தடக்சி தான். மேலும் இந்த விடுபட்ட இந்த போதனைகள் சிருஷ்டிப்பிற்கு எந்த வேரும் இல்லை என்று போதனை அதனோடு கலக்க முயன்றது. யூதர்களின் கருத்துகள் இருந்தது, யூதர்களின் பண்புகள் இருந்தது, ஆனால் யூதர்களின் முக்கிய காரியமான துவக்கத்தில் சிருஷ்டிப்பு நல்லதாக இருந்தது என்ற காரியம் அதில் இல்லை. அதனால் இந்த விஷயம் உடனடியாக ஒருவருடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, இது வித்தியாசமாக இருப்பதை குறிப்பிட்டது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இந்த காரியங்கள் எப்போது வெளிவந்தன, விடுபட்ட உபகரணங்கள்?

**Dr. டேரல் பாக்:** இந்த விடுபட்ட போதனைகள் எல்லாம் ஒரே சாமயத்தில் இரண்டாம் நூற்றாண்டின் துவக்க காலத்தில் வெளிவந்ததாக கருதப்படுகிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, அப்படின்னா இது இயேசுவிற்கு பிறகு கிறிஸ்தவ சபைகள் உருவான பிறகு நெடுங்காலத்திற்கு பிறகு தோன்றியது.

**Dr. டேரல் பாக்:** சரியாக சொன்னீர்கள்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இப்ப கிறிஸ்துவை பற்றிய ஒரு கண்ணோட்டம் இருக்கிறது ஆரம்ப நாட்களின் கீர்த்தனைகளில் அவர் சிருஷ்டிகர் என்று பாடப்பட்டிருக்கிறது. விடுபட்ட போதனைகளால் அதை நிறைவு செய்ய முடியவில்லை. இதை அவர்கள் முடிவு செய்ய முயன்ற விதத்தை பார்க்கும்போது, இரண்டு விதங்களை அவர்கள் பயன்படுத்தினார்கள். முதலில் அப்போஸ்தலர்களின் பெயர்களை இணைக்க முயன்றனர் அல்லது முக்கிய நபர்களான மரியாள் பிலிப்பு தோமா யூதாஸ் போன்ற யாருடைய உருவ

படத்தையாவது இணைக்க நினைத்தனர். ஆனா யூதாஸ், பற்றிய காரியங்களை வலுவாக்க சில சூழ்ச்சிகளை செய்தனர்,ஏன்னா மற்றவர்களால் அவன் மதிக்கப்படவில்லை. நல்ல காரணமாக தெரிகிறது இல்லையா. ஆனா அவங்க செய்கிற இன்னொரு வேலை என்னன்னா அவர்களுடைய சுவிசேஷங்கள் எல்லாம் சீராக அமையபெற்றதாக இருக்காது. இதனால தான் இரட்டை பண்பு கொண்ட நிலை உண்டாகிறது தீமையும் இருந்தது ஆவியானது நல்லதாகவும் இருந்தது. சீரற்ற தன்மையை கொண்ட சுவிசேஷங்கள், இப்போது அது முற்றிலும் உலகத்தோடு ஒத்து போகாத ஒன்றாகத்தான் இருக்கிறது, அதை வரலாற்று ரீதியாக ஆராய்ந்து பார்க்கவும் முடியாது. அதனால்,என்னுடைய கருத்து, இதுதான் நம்மிடம் இருக்கிற புதிய ஏற்ப்பட்டு காரியங்களுக்கும் விடுபட்ட சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களும் மிகப்பெரிய வேறுபாடுகள் உண்டாயிருக்கிறது. புதிய ஏற்பாடானது சகலவித வரலாற்று ஆய்வுகளுக்கும் உட்படுத்தப்பட்டது அதினால் இது வரலாற்றுக்கு ஏற்புடையதாக இருக்கிறது, ஆனா கினாஸ்டிசம் அப்படியல்ல.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. அதை நன்றாக தெளிவாக்க வேண்டுமென நினைக்கிறேன், இயேசுவை பற்றிய காரியங்கள் சில சூழ்சிகள் நடந்துகொண்டிருக்கிறது குறிப்பாக இயேசுவத்தின் சில புத்தகங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறது. மறுபடியும் சொன்னா, ஆதிகால ஆவணங்கள் மாற்றி ஆதிநாட்களின் ஆவணங்களில் உள்ள வித்தியாசம். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அதை கவனிப்பது கிடையாது, மாணவர்களும் அதை கவனிப்பது கிடையாது. ஆனா அதை சொல்லியாக வேண்டும்.

**Dr. டேரல் பாக்:** இந்த விசேஷித்த பதிவுகளில் பொதுவாக என்ன இருக்குமென்றால், ஆதிகால கிறிஸ்தவம் பலதரப்பட்ட கிறிஸ்தவ நிலைகளை கொண்டிருந்தது. அதனால் அவர்கள் கருத்து படி இரண்டாம் மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் அதை பற்றி நன்கு ஆராய்ந்து முதல் நூற்றாண்டில் நடந்ததை ஒன்று சேர்க்கின்றனர். ஆனால் இந்த கண்ணோட்டத்தை நிருபிக்கும் முதல் நூற்றாண்டின் உண்மையான ஆவணங்கள் பதிவுகள் நம்மிடம் கிடையாது, சரியா? முதல் நூற்றாண்டின் ஆவணங்களாக நம்மிடம் இருப்பதெல்லாம் பாரம்பரியத்தின் ஆவணங்கள் தான். சரி, என்ன சொல்லபடுகிறது என்று பார்த்தால் இந்த காரியங்கள் எல்லாம் அமிழ்ந்துவிட்டது அதினால் நம்மிடம் ஒன்றுமில்லை என்கின்றனார். ஆனா நம்மிடம் இருக்கிற ஆவணத்தில் இதற்கான எந்த பிரதிபலிப்பையும் நாம் பார்க்கவில்லை, இதில் அப்போஸ்தலர்களுக்கும் மற்ற காரியங்களை நம்ப முயன்று எதிர்த்து நிற்கிற சில விசுவாசிகளுக்கு இடையில் நடக்கிற விவாதம் வாக்குவாதங்களை பற்றி நம்மால் பார்க்க முடிகிறது. இந்த எழுத்துக்களில் சிருஷ்டிப்பை பற்றிய எந்த கதையையும் நாம பார்க்கல. அதனால் விடுபட்டவை என்பது இரண்டாம் மூன்றாம் நான்காம் நூற்றாண்டியில்

தோன்றியது அது முதல் நூற்றான்றிக்கு மறைவானதாக இருக்கிறது, இது நிச்சயமாக கட்டுகதையாகதான் இருக்கும், கிறிஸ்தவத்தில் மாற்றுகருத்து உடையவர்கள் மற்றும் இயேசு துவத்தை சார்த்தவர்கள் விவாதிக்க விரும்புகிற விதமான சில காரியங்களை முதல் நூற்றாண்டில் நடந்தவை என்று சொல்ல முயலுகிற ஒரு நிலையை அவர்கள் கொண்டிருகிறார்கள் என்று சொல்லலாம்.

Dr. டேனியேல் B. வால்லேஸ்: இது அருமையாக இருக்குது.

Dr. ஜான் அன்கொர்பெர்க்: ஆல்ரைட், இப்ப என்ன செய்யணுன்னா....

இதை நான் சேர்த்துக்கலாமா. இந்த ஆவணங்கள் எல்லாம் முதல் நூற்றாண்டில் இருந்து கிடைக்கப்பெறவில்ல என்று சொல்வது நேர்த்தியாக இருக்காது. இதற்கு கருத்து தெரிவிக்கும்படியாக இரண்டாம் நூற்றாண்டில் விமர்சக எழுத்தாளர்கள் இல்லை என்றிடலாம். ஏன்னா அவங்க அப்பா உயிரோசு இல்லை. இதெல்லாம் இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துவங்கியது அங்குதான் சில எழுத்தாளர்கள் எழும்பினார்கள், குறிப்பாக இரேனியஸ், தேர்டுல்லியன், போன்ற நபர்கள் வந்தார்கள், அவர்கள் இதெல்லாம் தவறான ஆவணங்கள் என்று கூறினார்கள். இது கிறிஸ்தவத்தின் நிஜமல்ல என்றனர். இது அப்போஸ்தலர்களிடம் இருந்து வந்த கிறிஸ்தவம் அல்ல என்றனர்.

Dr. டேரல் பாக்: ஆனா இதை பற்றிய சில குறிப்புகளை 120-130 ஆகிய

வருடங்களில் பெறப்பெற்றது, ஆனால் இதுல நடந்த எல்லா குழப்பங்களும் குறிப்பாக இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் நடந்தது.

Dr. ஜான் அன்கொர்பெர்க்: ஆல்ரைட், இப்ப வரலாற்று ஆதாரங்கள் எல்லாம் ஆதிகால ஆவங்கள் எல்லாம் ஒரு அமைப்பை பற்றி சொல்கிறதா நபரை பற்றி சொல்கிறதா.

Dr. டேரல் பாக்: புரளிகள் என்ன காரியத்தை பவர செய்ததோ அதுதான் முதன்மையாக நின்றிருக்கும்.

Dr. ஜான் அன்கொர்பெர்க்: உண்மை என்னனா, புதிய ஏற்ப்பாட்டில் நம்மிடம் இருபத்தி ஏழு புத்தகங்கள் இருக்கிறது. இப்ப, அடுத்த வாரம் என்ன பார்க்க இருக்கிறோம் என்றால், உலகத்தின் மற்ற மார்க்கங்களுக்கு மாறுபட்ட விதமாக இயேசு குறித்து சொல்லப்படுகிற காரியம் என்ன, கிறிஸ்தவம் அவர் தம்மை தேவன் என்று சொன்னதாகவும் அதை தான் மரணத்தில் இருந்து உயிர்த்தது மூலம் அவர் நிருபித்ததாகவும் கூறுகிறது.

இந்த காரியங்களை நாம் பார்க்க இருக்கிறோம் யார் வேண்டுமானாலும் தங்கள் வேதத்தை புரட்டி பார்க்க கூடிய சில முக்கியமான காரியங்களை வேதத்தில் இருந்தும் நாம் பார்க்க இருக்கிறோம். சொல்லப்படிகிற அறிக்கைகள். அதிலிருந்து அப்படியே நாம் இன்னொரு காரியத்தை பார்த்திடலாம் கிறிஸ்தவ சபைகளுக்கு

எதிராக வருபவைகள் என்னன்ன. வேதபாரகர்கள் எப்படி வார்த்தைகளை அனுசரிக்காமல் இருந்தனர்? நமக்கு கிடைக்கப்பட்ட பலவிதாம எழுத்துக்கள் நம்மிடம் நிறைய இருக்கிறது, அதெல்லாம் பின்னாலதான் இருக்கணும். எங்களோடு தொடர்ந்து இணைந்திருங்கள். நம்முடைய சமுதாயத்தில் இன்றைக்கு இருக்கிற மிக முக்கியமான காரியம் இது, கிறிஸ்தவம் வர்சஸ் இயேசு துவம்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.